DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.342/2025**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | கவியரசன் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | ஜெயபால் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.03.2026

1 முதல் 3 எதிரிகள் ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் மேட்டுமகாதானபுரத்தில் குடியிருந்து JCB ஆப்ரேட்டர் வேலை செய்து வருகிறேன். 1ம் எதிரி சண்முகம் எனது மாமா. 2ம் எதிரி எனது அண்ணன். 3ம் எதிரி என் அண்ணன். அ.சா.1 எனது மச்சான். சுமார் 1 வருடங்களுக்கு முன்பு இரவு 09.30 மணியளவில் நானும் அ.சா.1ம் ஆஜர் எதிரிகளும் சும்மா சண்டை போட்டுக்கொண்டு இருந்தோம். நானும் என்னுடன் இருந்த அ.சா.1 க்கு தலையில் காயம் ஏற்பட்டது. எனக்கும் எதிரிகளுக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை. கரூர் GH க்கு நானும் அ.சா.1ம் சென்றோம். நானும் அ.சா.1ம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்கக்கோரி, அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 12.09.2023 அன்று இரவு நானும், அ.சா.1 ம் வேலைக்கு சென்று விட்டு வீட்டிற்கு வந்து கொண்டிருந்தபோது ஆஜர் எதிரிகள் மூவரும்அ.சா.1 பார்த்து ஒருத்தனை அடிக்கனும் வாடா என்று கூப்பிட்டார்கள் என்றால் சரியல்ல. அதற்கு நான் வேலை இருக்கு மாமா நான் வீட்டிற்கு போகனும்த என்று

சொல்லிவிட்டு சென்றபோது எதிரிகள் மூவரும் என்னை பார்த்து ஒருத்தனை அடிக்கனும் சொல்லி கூப்பிட்டா வரமாட்டியா என்று ஆபாச வார்த்தைகளால் திட்டினார்கள் என்றால் சரியல்ல.

2. எதிரி சங்கர் என்னை பார்த்து left சண்முகம் அண்ணா நீ வரமாட்டியா என்று ஆபாச வார்த்தைகளால் திட்டி அருகில் கிடந்த கம்பியால என் தலையில் அடித்து தலையில் ரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதைத்தடுக்க சென்ற அ.சா.1 ஐ ரவி அவருகது சப்போட்டா என்று சொல்லி ஆபாச வார்த்தைகளால் திட்டி எதிரி சண்முகம் சங்கரிடம் இருந்த கம்பியை வாங்கி அ.சா.1 இடது பக்க தலையில் அடித்து இடது பக்க காதில் குத்தி கிழித்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார்கள் கத்தி வலி தாங்கமுடியாமல் ஓட முயன்ற போது எதிரி சண்முகம் கம்பியால் அ.சா1.ன் முதுகில் பின்பக்கம் குத்தி கிழித்தும் இடது பக்க தோள்பட்டையில் கிழித்தும் காயத்தை ஏற்படுத்தினார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்னே் என்றால் சரியல்ல.

3. பின்பு எதிரி சண்முகம் கம்பியை காண்பித்து சங்கரும், ரவி கிழே கிடந்த கல்லை எடுத்து காண்பித்தும் எங்களை பார்த்து இன்னைக்கு தப்புச்சுட்ட என்னைக்கிருந்தாலும் எங்கள் கையால் தான் சாவு என்று கொலைமிரட்டல் விட்டு சென்றார்கள் என்று போலிசார் விசாரணையில் சொல்லியுள்னே் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகளுடன் சமாதானமாகிவிட்ட படியாலும, எதிரிகளை வழக்கில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதாலும், எதிரிகள் எனது உறவினர்கள் என்பதாலும் உண்மையைய மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.17 18:37:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.